மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*2009* ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *30/2009*) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஜ) தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *2009* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *34/2009*), மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*2009* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *34/2009*)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வழக்கம்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

@ *21–7–2009* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, இப்போது அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிறது. ஆனால், இதிலே உள்ள ஒரு ஷரத்தை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விழாக்களின்போது ஜல்லிக்கட்டு நடத்தினால், அந்த விழாக் குழுவினர் இரண்டு இலட்ச ரூபாயை வைப்புத் தொகையாகக் கட்ட வேண்டுமென்ற ஒரு விதியை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அப்படிச் செய்தீர்கள் என்றால், எந்த ஊரிலும் ஜல்லிக்கட்டு விழாவை நடத்த யாரும் முன்வர மாட்டார்கள். இந்த விழாவைக்கூட 'பிச்சை எடுத்ததாம் பெருமாள், அதைப் பிடுங்கியதாம் அனுமார்' என்பதுபோல ஆங்காங்கே வசூல் செய்துதான் நடத்துகிறார்கள். நீங்கள் இரண்டு இலட்ச ரூபாயை வைப்புத் தொகையாக வைக்க வேண்டுமென்று சொன்னால், இந்த விழாவை நடத்துவது மிக, மிக சிரமம். ஆகவே, இரண்டு இலட்ச ரூபாய் வைப்புத் தொகை என்பதை அரசு நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மற்ற பிரிவுகளை காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களுடைய நீண்ட நெடிய, பாரம்பரியமிக்க வீர விளையாட்டுகளில் ஒன்று. குறிப்பாக மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இந்த விளையாட்டை யார் நடத்துகின்றபோதும், ஆட்சியாளர்கள் தடை விதித்தால் அவர்களுடைய எதிர்ப்பை, பகைமையைத் தேடிக் கொள்கிற ஒரு சூழலும் இருக்கிறது. ஆதலால் இரண்டு இலட்சம் ரூபாய் வைப்பீடு செய்ய வேண்டும் என்கிற நிபந்தனையைத் தளர்த்தி, உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டு, அந்த விளையாட்டில் ஈடுபட்ட வீரர்களைச் சிகிச்சைக்காக சேர்க்கின்றபோது, சென்னை அப்பலோ மருத்துவமனை, இராமச்சந்திரா மருத்துவமனை போன்ற அதிநவீன மருத்துவ சிகிச்சை மையங்களின் நடமாடும் மருத்துவமனைகளைக் கொண்டு, அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பை உறுதிசெய்கின்ற வகையில் வழிவகைக் கண்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தைக் கூற விரும்புகிறேன். அதேவேளையில், ஜல்லிக்கட்டு இன்னும் பல்வேறு மாவட்டங்களுக்கும் பரவுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை

எடுக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். உயிருக்கு ஆபத்து இல்லாத அளவுக்கு, முழுக் காயமடைந்து அதனால் கை, கால்களை இழக்காத அளவுக்கு, பாதுகாப்பான சாதனங்களுடன் இந்த விளையாட்டை நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு என்னுடைய கருத்தைக் கூறி இந்தச் சட்டத்தை வரவேற்று அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு சம்பந்தமான சட்டமுன்வடிவை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். ஆனால், அதேசமயத்தில் விழாவை நடத்தக்கூடிய கிராமத்தவர்கள் இரண்டு இலட்சம் ரூபாய் deposit செய்ய வேண்டுமென்ற நிபந்தனையை அரசு தளர்த்த வேண்டும். அரசினுடைய செலவிலே, உரிய பாதுகாப்புகளை அளித்து நடத்த வேண்டும். அதைப்போல, ஆண்டில் ஐந்து மாத காலம்தான் நடத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆண்டு முழுவதும் நடத்துவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஜல்லிக்கட்டு என்று சொல்லக்கூடிய வீர விளையாட்டை, வடமாடு என்று பல்வேறு வகைகளிலே நடத்துகிறார்கள். அதிலும் குறிப்பாக சிவகங்கை மாவட்டத்திலே வடமாடு, மஞ்சுவிரட்டு என்பதெல்லாம் சிறப்பாக ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெறுபவை. அவை ஆண்டினுடைய எல்லா காலங்களிலும் அந்தந்தக் கிராமத்தினுடைய சூழலுக்கேற்ப நடைபெறுகின்றன. அதைப்போல குலசாமி விழா, கிராமத்தினுடைய திருவிழாக்கள் போன்றவற்றை நடத்துகிற நேரத்தில் சாதாரணமாக மஞ்சுவிரட்டு நடத்துவது என்பது தென் மாவட்டங்களிலே இயல்பான, பாரம்பரியமான நடவடிக்கை.

பிற்பகல் 3–10

எனவே, அப்படிப்பட்டச் சூழலில் இந்தக் கால அளவு என்பது, பாரம்பரியமான அந்தத் திருவிழாக்களை முழுமையாக நடத்துவதற்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே, கால அளவு என்பதையும் எடுத்துவிட்டு, deposit என்பதையும் எடுத்துவிட்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் ஆவதற்குக் காரணம் 13–2–2009 அன்று இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே நடைபெற்றபோது, நீதிபதிகள் இந்த வழக்கு சம்பந்தமாக பல்வேறு ஆலோசனைகளை அரசுக்கு அளித்திருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் 20 இலட்சம் ரூபாய் deposit கட்ட வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். ஜனவரி மற்றும் பிப்ரவரி ஆகிய இரண்டு மாதங்கள் மட்டும்தான் அனுமதி வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நாங்கள் நம்முடைய Solicitor General போன்றவர்களிடமெல்லாம் சொல்லி, எந்தெந்த மாவட்டங்களிலே எப்பொழுதெல்லாம் திருவிழாக்கள் நடைபெறுகின்றன என்பதையெல்லாம் கவனத்திலே கொண்டு, ஐந்து மாத காலத்திற்குள்ளாக நடைபெற வேண்டும் என்று நாங்கள் சட்டத் திருத்தம் கொண்டுவந்திருக்கின்றோம். 20 இலட்சம் ரூபாய் என்பதற்குப் பதிலாக 2 இலட்சம் ரூபாய் என்று—அதுவும் அதிலே பங்கேற்பவர்கள் யாருக்கேனும் காயம் ஏற்பட்டாலோ அல்லது இறப்பு ஏற்பட்டாலோ அவர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்குவதற்காக, உச்ச நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துவதற்காக இந்தச் சட்டத்திலே இரண்டு இலட்சம் ரூபாய் என்று போட்டிருக்கிறோம். அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்றுகூட நமக்குத் தெரியாது. ஆகவே, கட்டாயம் இதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஜல்லிக்கட்டினை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2009) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஒ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2009), மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2009)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில், என்னுடைய தொகுதியிலும், கடலூர் மாவட்டம் முழுவதும் உள்ள முந்திரி விவசாயிகள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இப்படி ஒரு திட்டம் இருப்பதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ, மாவட்ட சமூக நலத் துறை அலுவலர்களோ, அந்தத் துறையினுடைய அதிகாரிகளோ அதற்கான விவரங்களைத் தெரிவிக்காத காரணத்தினால், இதர தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற அனைத்துச் சலுகைகளும்

@ 20–7–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.